மிருந்து, கோவை மாநகராட்சி மின்சார இலாகாவுக்கு, அந்தப் பகுதிகளை இணைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.35

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான பிரச்சினை அன்றைக்குக் கோவையிலே என்னிடம் சொல்லப்பட்டது. உடனடியாக 2,000 விளக்குகள் போட வேண்டுமென்று ஆணையாளரிடமும் தலைமைப் பொறியாளரிடமும் பேசி, கோவையின் புறநகர் பகுதிகளிலே அன்றைக்கே போட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம். அதற்கான வேலைகள் நடந்து முடிந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பிரச்சினையைப் பொறுத்த மட்டிலே ஐந்து நகரங்கள் இன்றைக்கு நகராட்சியின் பொறுப்பிலே மின்சார நிர்வாகத்தைத் தமிழ்நாட்டிலே வைத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இது சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை நகராட்சி நிர்வாகமும், மின்சார வாரியமும் கலந்து பேசி, முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) விழுப்புரம் நகர குடிநீர் அபிவிருத்தித் திட்டம் தற்போது செயல்படாமல் இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. தே. ஜனார்த்தனன் அவர்கள் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. தே. ஜனார்த்தனன்.

*** திரு. தே. ஜனார்த்தனன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் நகர குடிநீர் அபிவிருத்தித் திட்டம் தற்போது செயல்படாமல் இருப்பது குறித்து மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*** மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக ஒரு விவர அறிக்கை இந்த அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1991 செப்டம்பர் 28] [திரு. டி. எம். செல்வகணபதி]

அறிக்கை.

விழுப்புரம் நகரக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு 1990-ம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூபாய் 31.00 லட்சத்திற்கு அரசு ஆணை எண் 781, வருவாய்த் துறை, நாள்: 16—5—1990-ல் ஒப்புதல் வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின்படி 200 மி.மீ. விட்டமுள்ள இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் நீராதாரமாகத் தேர்வு செய்யப்பட்டது. பில்லூர் கிராமத்தில் ஆனாங்கூர் ஓடைக்கு அருகில் குழாய்க் கிணறுகள் போட முடிவு செய்யப்பட்டது. ஆனால், அக்கிராம மக்கள் குழாய்க் கிணறு போட எதிர்ப்பு தெரிவித்ததால், காவல் துறையினர் உதவியோடு ஒரு ஆழ்துளைக் கிணறு மட்டும் போடப்பட்டது. இக்கிணறு 123 மீட்டர் ஆழம் போடப்பட்டு அதிலிருந்து நீர், 15.0 குதிரைத் திறன் கொண்ட நீர் மூழ்கி மின் இறைப்பான் மூலம் 50,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்சேகரிப்புத் தொட்டிக்கு (duns) எடுக்கச் செல்லப்பட்டு அங்கிருந்து 6.4 கிலோ மீட்டர் நீளம் உள்ள நீர் ஊந்துக் குழாய் மூலம் விழுப்புரம் கிழக்குப் பகுதியில் உள்ள 6.0 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு ஏற்றப்பட்டு பகிர்மானக் குழாய்கள் மூலம் பொதுமக்களுக்கு விநியோகிக்க திட்டமிடப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு, திட்டம் சோதனை ஓட்டத்தில் (trial run) உள்ளது. இவ்வாழ்துளை கிணற்றின் கொடுதிறன், நிமிடத்திற்கு 1,087 லிட்டர் ஆகும்.

விழுப்புரம் நகராட்சி ஆணையர் இவ்வாழ்துளைக் கிணற்றிலிருந்து கிடைக்கும் நீர் பெண்ணையாற்று நீர் போல் சுவையாக இல்லாத காரணத்தினால், இத்திட்டத்தை பராமரிப்புக்காக எடுத்துக் கொள்ள இணங்கவில்லை. இவ்வாழ்துளைக் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட நீர் பரிசோதனை செய்யப்பட்டு குடிப்பதற்கு உகந்தது எனக் கண்டறியப்பட்டது. நகராட்சி ஆணையர் அவர்கள். குடிநீர் வடிகால் வாரியம் இத்திட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு பராமரித்து. பின். நகராட்சிக்கு ஒப்படைத்தால் நகராட்சி இத்திட்டத்தை பராமரிப்புக்காக எடுத்துக் கொள்ளும் என தெரிவித்துள்ளார். எனவே, இத்திட்டம், இன்னும் ஒரு மாத காலம், இவ்வாரியத்தின் பராமரிப்புக்குப்பின், நகராட்சியின் வசம் ஒப்படைக்கப்படும்.

திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் நகர குடிநீர்த் திட்டத்திற்கு அரசு 31 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, 123 மீட்டர் ஆழத்திற்கு ஆழ்குழாய் கிணறு அமைத்து, எண்ணெய்ப் பசை இருப்பதனால், அந்தத் தண்ணீரிலே கலந்திருப்பதன் காரணமாக அந்த நீர் சுவையற்றதாக இருப்பதை அரசு அறியுமா என்றும் அந்த சுவையற்ற நீரை நல்ல நீராக மாற்ற அரசு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்குழாய்க் கிணறு பற்றி மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப் போல், அந்த நீர் பெண்ணையாற்று நீர் போல சுவையில்லாத காரணத்தினாலேயே இத் திட்டத்தைப் பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ள விழுப்புரம் நகராட்சி ஆணையாளர் முன்வரவில்லை. அதன் காரணமாக, இவ்வாழ்குழாய் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட நீர் பரிசோதனை செய்யப்பட்டு குடிப்பதற்கு உகந்ததாக உள்ளது என்று கண்டறியப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக எந்த ஒரு பிரச்சனையும் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் நகரத்திலே இருக்கின்ற மக்கள் அங்கே குடிநீருக்காக ஒவ்வொரு வீட்டிலும் மூன்று அடி ஆழத்திற்குப் பள்ளம் தோண்டி அந்தப் பள்ளத்திலே இறங்கித்தான் தண்ணீர் பிடித்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு அவல நிலை இருக்கிறது. இந்த அவலநிலையைப் போக்குவதற்கு அங்கே இருக்கின்ற குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளும், நகராட்சி அலுவலர்களும் ஒற்றுமையாகச் செயல்படாததுதான் இதற்குக் காரணம் என்று நான் அறிகிறேன். ஆகவே, அவர்கள் ஒற்றுமையாகச் செயல்பட்டால் இந்தப் பிரச்சினை ஒரே தினத்திலே தீர்த்துவிடக் கூடியதாக அமையும் என்று கருதுகிறேன். விவசாயிகள் பயன்படுத்துகின்ற தண்ணீர் கிட்டத்தட்ட 50 லிருந்து 70 மீட்டர் ஆழத்திலிருந்து எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தண்ணீர் சுவையாக இருக்கிறது. 123 மீட்டர் ஆழத்திற்கு அங்கே எண்ணெய்ப் பசை இருப்பதன் காரணமாகத்தான் சுவையற்றதாக இருக்கிறது என்று மக்கள் சொல்லுகிறார்கள். விவசாயிகள் பயன்படுத்துகின்ற நீர் 50 மீட்டரிலிருந்து 70 மீட்டர் ஆழத்திலே கிடைக்

இன்ற நீர் சுவையாக அதே பகுதியிலே இருக்கிறது. இதனை அரசு அறியுமா ? மேலும், அரசு 31 இலட்சம ரூபாய் ஒதுக்கியதிலே ரூ. 20 இலட்சம்தான் செலவாகி இருக்கிறது. மீதம 11 இலட்சம் பணம் அங்கேயிருக்கிறது. அந்தப் பணத்தைக் கொண்டு அந்த விவசாயிகள் பயன்படுத்துகிற, 70 மீட்டர் ஆழத்திலேயே ஆழ் குழாய்க் கிணறு அமைத்தால் அந்த நீர் சுவையாக இருக்கும் என்று மக்கள் விரும்புகிறார்கள். இதனை அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக விவரமான ஆய்வு நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970-71 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) பொது நிறுவனங்கள் தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு (1986-87) அளித்த முப்பத்தேழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் பதினான்காவது அறிக்கை;

(2) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1984-85 மற்றும் 1985-86 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்பான பத்திகள் மீதான குழுவின் பதினைந்தாவது அறிக்கை ;

(3) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 31-3-1988 ஆம் தேதியுடன் முடிவுற்ற ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) எண் 4/1989 பொது நிறுவனங்கள் ஆண்டுக் கணக்குகளை இறுதியாக்குவதில் காலதாமதம் மற்றும் பொது நிறுவனங்களினால்